***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**MCOP.No.655/2022**

P.W.1 திருமதி.K.விசாலாட்சி க/பெ.லேட்.கிருஷ்ணமூர்த்தி
நாள் – 22.04.2025.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு கூடுதல் முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

**கூடுதல் முதல் விசாரணை :–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.8 | - | 1-ம் மனுதாரர் மற்றும் கிருஷ்ணமூர்த்திக்கு நடைபெற்ற திருமணத்திற்கான திருமணச்சான்று நகல் |
| ம.சா.ஆ.9 | - | இறந்த கிருஷ்ணமூர்த்தியின் வாரிசு சான்று நகல் |
| ம.சா.ஆ.10 | - | கிருஷ்ணமூர்த்தி பால் வியாபரம் செய்ததற்கான பால் வியாபார அட்டை |
| ம.சா.ஆ.11 | - | கிருஷ்ணமூர்த்தியின் ஆதார் நகல் |
| ம.சா.ஆ.12 | - | கிருஷ்ணமூர்த்தியின் ஓட்டுநர் உரிமம் நகல் |

**எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த கிருஷ்ணமூர்த்திக்கு நான் இரண்டாவது மனைவி என்றால் சரிதான், என் கணவரின் முதல் மனைவி மல்லிகா இறந்த பிறகு 8 வருடம் கழித்து தான் அவர் என்னை திருமணம் செய்து கொண்டார் என்று சாட்சி பதில் அளிக்கிறார். என் கணவரின் முதல் மனைவிக்கு ஒரு மகள், பெயர் சந்தியா, இம்மனுவில் 2-ம் மனுதாரர் ஆவார் . ம.சா.ஆ.9 வாரிசு சான்றிதழில் கண்டுள்ள வாரிசுகளை தவிர வேறு நபர்கள் இல்லை என்றால் சரிதான் . ம.சா.ஆ.8 திருமணச்சான்று என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 ஐ தவிர என் கணவர் பால் வியாபாரம் செய்தார் என்பதற்கு வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், அடிப்படை ஆதாரம் இல்லை என்றாலும் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*